# நான் என்ன செய்ய வேண்டும்?

**தொடர் - 45**

ஜுன் 2012

*தொகுப்பு :* **Dr. B. வில்லியம் தர்ம ராஜா**

**ஏசாயா**

2201 கர்த்தருடைய வார்த்தையைக் கேள் (1:10, 66:5)

2202 தேவனுடைய வேதத்துக்குச் செவிகொடு (1:10, 19)

2203 வேதத்தை / கர்த்தரின் கற்பனைகளைக் கவனி (8:20, 48:18, 51:4)

2204 சத்தியத்தைக் கைக்கொள் (26:2)

2205 கர்த்தர் சொல்வதை கவனித்துக்கேள் (28:23)

2206 கர்த்தர் வாக்கைக் கேள் (30:2)

2207 கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசி (34:16)

2208 கர்த்தருடைய சத்தியத்தைத் தியானி (38:18)

2209 கர்த்தருக்குச் செவிகொடு (28:23, 46:3,12, 48:12, 49:1, 51:1,4,7)

2210 “என் வேதத்தை இருதயத்தில் பதித்துக்கொள்” (51:7)

2211 “என் உடன்படிக்கையைப் பற்றிக்கொள்” (56:4,6)

2212 கர்த்தர் கூப்பிட்டால், நீ மறு உத்தரவு கொடு (65:12, 66:4)

2213 கர்த்தர் பேசும்போது கேள் (28:23, 65:12, 66:4)

2214 கர்த்தருடைய வசனத்துக்கு நடுங்கு (66:5)

2215 உன்னைக் கழுவிச் சுத்திகரி (1:16)

2216 நன்மை செய்யப்படி (1:17)

2217 நியாயத்தைத் தேடு (1:17)

2218 ஒடுக்கப்பட்டவனை ஆதரி (1:17)

2219 திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும் விதவையின் வழக்கையும் விசாரி (1:17)

2220 வீறாப்பைத் தனி (2:11, 17)

2221 நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடு (2:22)

2222 காத்திருக்கும் உன் நேசருக்கு நல்ல திராட்சப் பழங்களைத் தா (5:2,4)

2223 கர்த்தரின் கரத்தின் செய்கையை சிந்திப்பாயாக (5:12)

2224 “நான் பார்க்கும்படி கர்த்தர் தமது கிரியையைச் சீக்கிரமாய் நடப்பிக்கட்டும்” என்று சொல்லாதே (5:19)

2225 கர்த்தரை உயர்த்தி கர்த்தரைத் துதி (12:1,4, 38:19, 25:1)

2226 கர்த்தரை கீர்த்தனம் பண்ணு (12:5)

2227 கர்த்தரை மகிமைப்படுத்து (24:15)

2228 கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடு (42:10)

2229 கர்த்தருடைய துதியைப் பாடு (42:10)

2230 கர்த்தருக்கு மகிமையைச் செலுத்தி, அவர் துதியைத் தீவுகளில் அறிவி (42:12)

2231 கர்த்தரின் துதியைச் சொல்லி வா (43:21)

2232 கர்த்தர் செய்த எல்லாவற்றிற்குத் தக்கதாகவும், உனக்குச் செய்த மகா நன்மைக்குத் தக்கதாகவும், கர்த்தருடைய கிரியைகளையும், கர்த்தருடைய துதிகளையும் பிரஸ்தாபம் பண்ணு (63:7)

2233 மாதந்தோறும், ஓய்வுநாள் தோறும் கர்த்தருக்கு முன்பாகத் தொழுதுகொள் (66:23)



2234 கர்த்தருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவி (12:4)

2235 கர்த்தருடைய நாமம் உயர்ந்ததென்று பிரஸ்தாபம் பண்ணு (12:4)

2236 கர்த்தருக்குப் பலிகளோடும் காணிக்கைகளோடும் ஆராதனை செய் (19:21)

2237 கர்த்தருக்குப் பொருத்தனைகள் பண்ணினால் அவைகளை செலுத்து (19:21)

2238 உன் விண்ணப்பத்தைக் கேட்டு, உன்னைக் குணமாக்க கர்த்தரிடத்தில் மனந்திரும்பு (19:22)

2239 கர்த்தரை உறுதியாய்ப் பற்றிக்கொள் (26:3)

2240 கர்த்தரை என்றென்றைக்கும் நம்பு; அவர் நித்திய கன்மலை (26:4)

2241 கர்த்தருடைய நாமமும் அவரை நினைக்கும் நினைவும் உன் ஆத்தும வாஞ்சையாயிருப்பதாக (26:8)

2242 கர்த்தரை அதிகாலையில் தேடு (26:9)

2243 கர்த்தருடைய மகத்துவதைக் கவனி (26:10)

2244 வாயினால் கர்த்தரிடத்தில் சேர்ந்தும் உதடுகளினால் கர்த்தரைக் கனம்பண்ணியும், இருதயத்திலோ தூரமாய் விலகியிராதே (29:13)

2245 கர்த்தருடைய நாமத்தைப் பரிசுத்தப்படுத்து (29:23)

2246 கர்த்தருக்குக் காத்திரு; அவன் பாக்கியவான் (30:18)

2247 சகாயமடையும் படி கர்த்தரைத் தேடு (31:1)

2248 கர்த்தருக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நட (38:3)

2249 கர்த்தருடைய பார்வைக்கு நலமானதைச் செய் (38:3)

2250 உன் பிள்ளைகளுக்கு கர்த்தருடைய சத்தியத்தைத் தெரிவி (38:19)

---

## "VBS" என்னும் விசுவாச நடை”

(கோடை விடுமுறையால் குழந்தைகளுக்கு கிறிஸ்துவை அறிவிக்கும் பணி நிகழ்கிறது – செய்தி)

மரம் முழுவதும் கனிகள், கிளை எங்கும் பறவைகள்!
எங்கும் ஒலிக்கும் இயேசுவின் நாமம்!
எங்கும் கேட்கும் அல்லேலூயா சத்தம்!!
புதையலாய் புதைந்திருக்கும் ஞானத்தை
விசுவாசத்தால் தோண்டும் வேள்வி!
மனுஷனும் சொல்லவில்லை; மகானும் சொல்லவில்லை,
அரசனும் சொல்லவில்லை; அரசாங்கமும் சொல்லவில்லை!
இரட்சகர் இயேசு சொன்னார் கர்த்தராகிய கிறிஸ்து சொன்னார்!
“சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வர இடங்கொடுங்கள்” என்று
“அவர்களைத் தடை செய்யாதிருங்கள்” என்று!
யுத்தத்தால் ரத்தத்தை சிந்த அல்ல வாழ்க்கை,
அன்பினால் சமாதானத்தை விதைக்கவே வாழ்க்கை,
மனுக்குலமே! மனுக்குலமே!!
கன்னத்திலே அறைந்தது போதும்; மறு கன்னத்தையும் காட்ட பழகு!
இது “குலகல்வி அல்ல” “குடும்ப கல்வி அல்ல” நண்பனே.... நண்பனே....!
பரிசுத்த ரத்தத்தை சிந்தி இருதயத்தை பரிசுத்தமாக்கும் முயற்சி
கிறிஸ்துவுக்கு முன்பும் கிறிஸ்துதான்! கிறிஸ்துவுக்கு பின்பும் கிறிஸ்துதான்!
– பரிசுத்தத்தின் வழி

**Er. A. ஜெயபால்** Tuticorin.

# “பெரிய கனவுகளின் பின்னணியில் பெரிய விசுவாசம்”

Dr. P. செல்வராஜ், கோவை

நமது குறிக்கோள் மிகவும் உயர்வாக இருப்பதால் நம்மால் அதை அடைய முடியாமல் போகிறதா அல்லது அது மிகவும் தாழ்வாக இருப்பதால் நாம் அதை அடைந்து விடுகிறோமா? மிகவும் தாழ்வான குறிக்கோளை நாம் அடைந்துவிடுகிறோம் என்பது தான் நமக்கு பெரிய ஆபத்தாக இருக்கிறது. மைக்கல் ஏஞ்சலோவின் சொற்றொடர் ஒன்று இப்பொருளை வெளிப்படுத்துவதாக உள்ளது.

நாம் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் கனவுகள் நிறைவேற நமக்கு விசுவாசம் தேவைப்படுகிறது. “இதைச் செய்ய என்னால் உங்களுக்குப் பார்வை கொடுக்க எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா?” என்ற இயேசுவின் கேள்விக்கு இரண்டு பார்வையற்றோர் சொன்னபதில் “ஆம், விசுவாசிக்கிறோம் ஆண்டவரே!” (மத்தேயு 9:28) தொடர்ந்து நாம் வேதாகமத்தில் வாசிப்பதென்ன? “உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது!” (மத்தேயு 9:29) உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது. (மத்தேயு 9:30) அவர்கள் விசுவாசித்தார்கள்; பார்வையடைந்தார்கள்.

நாம் நம்முடைய விசுவாசத்தில் வளர வேண்டும், வளர முடியும். “....விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்” (ரோமர் 10:17) விசுவாசத்தைக் கட்டியெழுப்பும் அருளுரையை கேட்கும்போதெல்லாம் நம்முடைய விசுவாசம் வளருகிறது. தேவனுடைய வார்த்தையைக் கேட்பதை விட்டு நாம் விலக விலக நம்முடைய விசுவாசமானது மேலும், மேலும் குறைகிறது. தேவனுடைய வார்த்தையைக் கேட்பதற்கு நேரமில்லை என்று கூறுவது ஒரு பொய்க்காரணமாகும். ஒருநாளை நாம் எவ்வாறெல்லாம் செலவிடுகிறோம் என்பதை ஒரு சிறிய பகுப்பாய்வு செய்துதான் பாருங்களேன்!

ஒரு சராசரி மனிதன் ஒரு நாளில் ஏறத்தாழ 50,000 தடவை தனக்குத்தானே பேசிக்கொள்கிறான். அதில் 80 விழுக்காடு எதிர்மறையான பேச்சு; “என்னால் முடியாது” போன்ற எதிர்மறையான அறிக்கைகள். “அவன் (மனிதனின்) இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் (மனிதன்) இருக்கிறான்” (நீதிமொழிகள் 23:7) விசுவாசம் பிரச்சினையைப் பார்க்காது, அதற்கான தீர்வைப் பார்க்கும்.

நம்முடைய விசுவாசத்தை நாம் சொற்களின் வாயிலாக அறிக்கை செய்ய வேண்டும். “பாருங்கள், சொல்லுங்கள், பெற்றுக்கொள்ளுங்கள்” என்று ஊழியர் ஜெரி சவெல் கூறுவதுண்டு. நீங்கள் விசுவாசிக்கும் காரியங்களைப் பட்டியலிட்டு அவை ஒவ்வொன்றையும் அறிக்கை செய்து பாருங்கள். பிசாசு ஏதாவது கூறினால் எதிர்த்துப் பேசுங்கள். நீங்கள் விசுவாசிப்பதை அறிக்கை செய்து கொண்டேயிருங்கள்.

விசுவாசமானது நாம் பார்ப்பதிலிருந்து அறிக்கை செய்வதிலிருந்து, செயல்படும் நிலைக்கு வரவேண்டும் “... கிரியைகள் இல்லாத விசுவாசம் செத்தது...” (யாக்கோபு 2:20) “விசுவாசம் மலைகளைப் பெயர்க்கும், ஆனால், தேவன் உங்களிடம் ஒரு மண்வெட்டியைக் கொடுத்தால் ஆச்சரியப்படாதீர்கள்”

நாம் தேவனிடத்தில் விசுவாசம் உள்ளவர்களாய் இருக்கும்போது நம்முடைய நம்பிக்கையின் அடையாளமாக அது இருக்கிறது. விசுவாசத்தைப் பொறுத்தமட்டில் நமக்கிருக்கும் மிகப்பெரிய போராட்டமானது நம்முடைய சிந்தனை வாழ்க்கைதான்.



எண்ணங்களோடு நம்முடைய உணர்வுகளையும், உணர்ச்சிகளையும்கூட நாம் மேற்கொள்ள வேண்டும். வேதாகமம் 365 இடங்களில் “பயப்படாதே!” என்று கூறுகிறது, அது உங்களுக்குத் தெரியுமா?

விசுவாசம் சிறப்பாகப் புலப்படுவது நம்முடைய துதியில்தான். நீங்கள் விசுவாசிக்கும் காரியங்களுக்காகத் தேவனைத் துதியுங்கள். அது சாத்தானை குழப்பத்திற்குள்ளாக்கும். உங்களுடைய துதி சாத்தானுக்குப் பிடிக்காது. துதிக்கும்போது பிரச்சனையையல்ல தீர்வை நீங்கள் பெரிதாக்குகிறீர்கள், காண்கிறீர்கள்.

உங்கள் விசுவாசம் நிறைவேற விதையுங்கள்; ஊழியத் திட்டங்களில் விதையுங்கள். அறுவடைக்கு விதைப்பு இன்றியமையாதது என்பது உங்களுக்குத் தெரியுமே!

விசுவாசத்தை அறிக்கை செய்தபின்பு இளைப்பாறுங்கள். “.... இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது. ....இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல... கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; பயப்படாமலும், கலங்காமலும் இருங்கள்... கர்த்தர் உங்களோடு இருக்கிறார்....” (2நாளாகமம் 20:15-28) பெறுமையுடனிருங்கள். சந்தேகம் கொள்ளாதிருங்கள்.

எருசலேமின் அலங்கத்தை எடுத்துக்கட்டுவது நெகேமியாவின் கனவாயிருந்தது. அது ஒரு பெரிய கனவு. அதன் பின்னணியில் பெரிய விசுவாசம் இருந்தது. எதிராக செயல்பட்டவர்களிடம் நெகேமியா உரைத்த சொற்களைக் கவனித்துப் பாருங்கள். “பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்குக் காரியத்தை (கட்டியெழுப்பும் பணியை) கைகூடிவரப் பண்ணுவார்; அவருடைய ஊழியக்காரராகிய நாங்கள் எழுந்து கட்டுவோம்; உங்களுக்கோவென்றால் எருசலேமிலே பங்குமில்லை, பாத்தியமுமில்லை; உங்கள் பேர் விளங்க ஒன்றும் இல்லை...” (நெகேமியா 2:20). நெகேமியாவின் கனவு பெரிதாக இருந்தாலும் அதன் பின்னணியிலிருந்த பெரிய விசுவாசமானது அதை நிஜமாக்கியதல்லவா? உங்கள் கனவு பெரிதாக இருக்கட்டும். ஆனால், அதன் பின்னணியில் பெரிய விசுவாசம் இருக்கிறதா?


## *தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

நாள் : ஜுன் 26 கடைசி செவ்வாய்
நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய
இடம் : காமராஜர் திருமண மண்டபம்,
பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.

**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**

*தேவனுடைய கூடாரத்தில்*

## திறப்பின் வாயில் ஜெபம்

**2012 ஜுன் 27 கடைசி புதன் – காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

*நீங்களும் வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்! இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!*

*நேரில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்கள் ஜெப விண்ணப்பங்களை எங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் அனுப்பலாம்.*

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை–626 201. போன் 04562–258194

வாலிபர் பக்கம்

# நீ மாதிரியாயிரு

***Be an example for the believers in purity***

*சகோ. S. ஜெபராஜ்* President, Grace Ministries

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிப சகோதர சகோதரிகளுக்கு இன்ப இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். 1தீமோத்தேயு 4:12 வசனத்தின்படி உங்களை ஒருவரும் அசட்டை பண்ணாதபடிக்கு நீங்கள் வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும் விசுவாசத்திலும் விசுவாசிகளுக்கு மாதிரியாய் இருக்க வேண்டியதைக் குறித்து கடந்த இதழ்களில் கற்றுக்கொள்ளும்படியாய் தேவன் அருளிய கிருபைக்காய் தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன். அந்த வசனத்தின் இறுதி பகுதி கூறுகிறது. நீங்கள் கற்பில் விசுவாசிகளுக்கு மாதிரியாய் இருக்க வேண்டும் என்று, இதை ஆங்கில வேதாகமத்தில் இப்படி வாசிக்கிறோம் Be an examble for the believers in purity. நீங்கள் பரிசுத்தத்தில் முன் மாதிரியாயிருங்கள்.

### *பரிசுத்தத்தின் மேன்மை :*

தேவன் உங்களில் விரும்புவது அப்பழுக்கற்ற பரிசுத்தமான வாழ்க்கை. நாம் எல்லாவற்றிலும் முனமாதிரியாக இருந்தாலும், நம்முடைய அன்றாட நடமுறை வாழ்க்கையில் அசுத்தமான பாவங்கள் காணப்படுமானால் அதில் பயன் ஒன்றுமில்ரைல. யோசேப்பு எகிப்திலே அடிமையாக போத்திபாரிடத்திலே விற்கப்பட்டு அவனுடைய வீட்டிலே விசாரணைக்காரனாக நியமிக்கப்படுகிறான். யோசேப்பினிமித்தம் கர்த்தர் போத்திபாரை, அவன் வீட்டிலும், வெளியிலும், அவனுக்கு உண்டானவைகள் எல்லாவற்றிலும் ஆசீர்வதித்தார். யோசேப்பிற்கோ ஒவ்வொரு நாளும் சோதனைதான். ஆனால் அவனோ தன்னை கர்த்தருக்குள் பரிசுத்தமாய் காத்துக்கொள்ளுவதிலே உறுதியாகவும் மிகவும் ஜாக்கிரதை உள்ளவனாகவும் காணப்பட்டான். அதற்கு விலைக்கிரயமாக நிந்தையையும் அவமானத்தையும் சிறைவாழ்வையும் ஏற்றுக்கொள்ளத் தயங்கவில்லை. கர்த்தரோ யோசேப்போடே இருந்து அவன்மேல் கிருபை வைத்தார். (ஆதி. 39:21) அவனுடைய பரிசுத்தமான கறைதிறையற்ற கற்புள்ள வாழ்க்கைக்கு பரிசாக தேவன் யோசேப்பை எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக உயர்த்தினார். (ஆதி. 41:41). பார்வோன் கையில் போட்டிருந்த முத்திரை மோதிரம் யோசேப்பின் விரலின் அணிவிக்கப்படுகிறது. அவனுக்கு மெல்லிய வஸ்திரம் கழுத்திலே பொன்சரப்பணி, இரண்டாம் இரதத்தில் பவனி. எகிப்து தேசத்திலுள்ளவர்களில் ஒருவனும் யோசேப்பின் உத்தரவு இல்லாமல் தன் கையையாவது காலையாவது அசைக்கக்கூடாது என்று பார்வோன் கட்டளையிடுகிறான். அடிமையாய் விற்கப்பட்ட யோசேப்பு தன் பரிசுத்த வாழ்க்கையால் தேவனை பிரியப்படுத்தினபடியால் அநேகருக்கு ஆசீர்வாதமாய் தேவன் அவனை மாற்றினார்.

### *பரிசுத்தமாய் காத்துக்கொள்ளுவது எப்படி?*

வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உம் வசனத்தின் படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால் தானே (சங். 119:9). கர்த்தருடைய வசனம் யோசேப்பை புடமிட்டது. (சங். 105:19) உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும் என் பாதைக்கு வெளிச்சமாயிருக்கிறது (சங். 119:105). வசனம் உங்களை பரிசுத்தப்படுத்துகிறதினால்தான் பிசாசானவன் வந்து விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துப்போட வகைதேடுகிறான் (லூக். 8:12) வாலிபரே! தேவ வசனம் உங்களில் நிலைத்திருக்கிறது (1யோ. 2:14) தினந்தோறும் ஒழுங்காக, கிரமமாக வேதவசனத்தை வாசித்து தியானம் செய்யுங்கள். அதன்படி நடவுங்கள். நான் உனக்கு போதித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன். உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன் (சங். 32:8) உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு காரியங்களிலும், வேத வசனத்தின் படியேயும் தேவ நடத்துதலின் படியேயும் செயல்பட ஜாக்கிரதையாய் இருக்கும்பொழுது கற்பிலே மாதிரியாய் நடந்து கொள்ளமுடியும். உங்களுடைய உள்ளான அந்தரங்க வாழ்க்கையில் பரிசுத்தம் காணப்படுகிறதா? அப்போது சிந்தையிலும், செயலிலும் பரிசுத்தமாக வாழ பழகிக்கொள்ள முடியும்.

### *தேவன் விரும்பும் முன்மாதிரியான பரிசுத்தம்*

தேவன் நாளை ஆசீர்வதித்து பரிசுத்தமாக்கினார் (ஆதி. 2:3). முதற்பேறு அனைத்தையும் பரிசுத்தப்படுத்தும்படி மோசேக்கு கற்பிக்கிறார். (யாத். 13:2) ஆரோனுடைய வஸ்திரங்களை பரிசுத்தமாக்கினார் (யாத். 29:21) ஜனங்கள் கூடி ஆராதிக்கிற ஆலயத்தை பரிசுத்தமாக்கினார். (1இரா. 9:3). எல்லாவற்றிற்கும் மேலாக ஆராதனை செய்ய கூடி வரும் ஜனங்களை, பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரை தொழுது கொள்ளுங்கள் என்று கட்டளை கொடுக்கிறார். (1நாளா. 16:29, சங். 29:2). உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். (பேது. 1:15). பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம் (2கொரி. 7:1). அன்பான வாலிப தம்பி, தங்கை நீங்கள் பரிசுத்தத்தை உங்கள் வாழ்நாள் முழுவதும் காத்து நடவுங்கள். இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்பொழுது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக. உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டைப்பண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு. தேவன்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக ஆமென்.

## வாழ்த்துகிறோம்!

தூத்துக்குடி மாவட்டம் ஐய்யநேரி பணித்தள மிஷனெரி திருமதி. & திரு. சாமுவேல் பீட்டர் அவர்களின் மகளும் நமது தூத்துக்குடி மாவட்டம் அப்பனேரி பணித்தள மிஷனெரி சகோதரி. எஸ்தர் 26-4-2012 அன்று சகோ. ஜெசுராஜ் ஜோசப் அவர்களோடு திருமணத்தில் இணைக்கப்பட்டார். இவர்களை கிருபையின் ஊழியம் சார்பாக இயேசுவின் இனிதான நாமத்தில் வாழ்த்துகிறோம்.

## பணித்தள அலுவலகம்

ஊழியத்தின் விரிவாக்கத்தை மனதிற்கொண்டு நமது ஏழாயிரம் பண்ணை தேவனுடைய கூடாரத்தில் பணித்தள அலுவலகம் கடந்த மே மாத முதல் செயல்பட ஆரம்பித்துள்ளது. அதற்கு ஏற்ற அலுவலக ஊழியர்கள் கணிணி பயன்பாடு அறிந்த ஊழியர்கள் தேவன் தர ஜெபியுங்கள்.

## *கிருபையின் ஊழியங்களுக்காய் முழங்காலில்...*

1. தேவன் முப்பெருமுகாம்களை ஆசீர்வாதமாக நடத்தித்தந்ததற்காக துதியுங்கள்
2. முகாமில் இரட்சிக்கப்பட்ட அபிஷேகம் பெற்ற, ஞானஸ்நானம் பெற்ற பெரியவர்கள் வாலிபர்கள் கிறிஸ்துவில் நிலைத்திருக்க, வளர ஜெபியுங்கள். (மே 17-19)
3. கடந்த 24 வல்லமை முகாம்களைக் காட்டிலும் இந்த முகாமில் அதிகமான நபரை தேவன் அழைத்து வந்ததற்காக (சுமார் 600 பேர்) தேவனைத் துதியுங்கள்.
4. நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆலயமில்லா 325 கிராம VBS களுக்காக ஜெபியுங்கள்.
5. நெல்லை மாவட்டம் திருவேங்கடம் கிராமம் மிஷனரி ஆலய கட்டுமான தடையில்லாச் சான்று 2 ஆண்டுகளுக்கு மேலாக கிடைக்காதிருந்ததை, கிடைக்கச் செய்த தேவனைத் துதியுங்கள்.
6. நெல்லை மாவட்டம் திருவேங்கடம் கிராமம் மிஷனரி ஆலய கட்டுமான அனுமதி நெல்லை கலெக்டர் அலுவலகத்திலிருந்து கிடைக்க ஜெபியுங்கள்.
7. கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் தூத்துக்குடி மாவட்டம் திருப்புளியங்குடி மிஷனெரி ஜெபவீடு கான்கிரீட் மேற்கூரை அமைக்கப்பட ஜெபியுங்கள்.
8. திருப்பூர் மாவட்டம் தொட்டிப்பாளையம் கிராமத்தில் மிஷனெரி ஆலயம் கட்ட தேவன் தந்த 5½ சென்ட் இடத்திற்காக துதியுங்கள்.
9. திருப்பூர் மாவட்டம் தொட்டிப்பாளையம் கிராமத்தில் மற்றுமொரு 5½ சென்ட் இடம் வாங்க ரூ. 46,000 அட்வான்ஸ் கொடுக்கப்பட்டுள்ளது மீதித் தேவை ரூ. 1¼ இலட்சம் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.
10. விருதுநகர் மாவட்டம் நல்லி கிராமத்தில் மிஷனெரி ஆலயம் கட்ட அனுமதி கிடைக்க ஜெபியுங்கள்.
11. திருப்பூர் மாவட்டம் தொட்டிப்பாளையம் கிராமத்தில் ஆலயம் கட்ட தேவன் எழுப்பியுள்ள குடும்பத்துக்காக துதியுங்கள்.
12. நெல்லை மாவட்டம் ஐய்யநேரி கிராமம் மிஷனெரி ஜெப இல்லம் கட்ட ஓராண்டுக்கு மேலாக அனுமதி தர தாமதிக்கும் பஞ்சாயத்து தலைவர் அனுமதி தர ஜெபியுங்கள்.
13. விருதுநகர் மாவட்டம் கன்னித்தேவன்பட்டி கிராமத்தில் மிஷனெரி ஆலயம் கட்டப்பட தேவன் எழுப்பியுள்ள குடும்பத்திற்காக துதியுங்கள்.
14. தூத்துக்குடி மாவட்டம் பேட்மா நகரம் கிராமத்தில் தேவன் ஆலயம் கட்ட தந்த இடத்திற்காக துதியுங்கள்.
15. திருச்சி மாவட்டம் தோப்புப்பட்டி கிராமத்தில் மிஷனெரி தங்கும் இல்லம் கட்டி முடிக்கப்பட தேவை ரூ. 1½ இலட்சம் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.
16. தூத்துக்குடி மாவட்டம் பேட்மாநகரம் கிராமத்தில் ஆலயம் கட்ட முன்வந்துள்ள குடும்பத்துக்காக தேவனைத் துதியுங்கள்.
17. ஏழாயிரம்பண்ணை, தேவனுடைய கூடாரம் மூலம் நடைபெறும் திறப்பின் வாசல் ஜெபம், உபவாச ஜெபங்களுக்காக ஜெபியுங்கள்.
18. ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கம் மூலம் இந்த வருடம் முழுவதும் நடைபெற உள்ள சிறுவர் முகாம்கள் 20, வாலிபர் முகாம்கள் 20, மாணவர் முகாம்கள் 10 இவைகள் ஆசீர்வாதமாக நடைபெற ஜெபியுங்கள்.



19. தேவனுடைய கூடார ஊழியங்கள் மூலம் நடைபெறும் குடும்ப மனமகிழ்ச்சி முகாம்கள் 20 ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.
20. பள்ளி மாணவர்கள் மத்தியில் நடத்தப்படவுள்ள மாணவர் ஆலோசனை கூடுகை தேவனால் ஆசீர்வாதமாக நடத்தப்பட ஜெபியுங்கள்.
21. மிஷனெரி பிள்ளைகளின் புதிய கல்வி ஆண்டின் கல்விக்கான தேவை சந்திக்கும் நபர்களை குடும்பங்களை தேவன் எழுப்ப ஜெபியுங்கள். (தேவை ரூ. 75 ஆயிரம்)
22. கிராமங்களின் மிஷனெரிகள் VBS பணி மூலம் சந்தித்த குடும்பங்கள் கிராம ஆராதனைகளில், வாராந்திர ஜெபக்கூடுகைகளில் ஒழுங்காக பங்குபெற ஜெபியுங்கள்.
23. நமது மிஷனெரி பணிக்கு தேவையான மிஷனெரி குடும்பங்களை மிஷனெரி வாலிப சகோதர, சகோதரிகளை எழுப்பித்தர ஜெபியுங்கள்.
24. இசை வாசிக்க அறிந்த, நன்றாக கணணி பயன்படுத்த அறிந்த சகோதர, சகோதரிகளை அலுவலகப் பணிக்கு (தலைமை அலுவலகம், பணித்தள அலுவலகம்) தேவன் தர ஜெபியுங்கள்.
25. சகோ. பொற்செல்வன் ஆசீர், சகோ. ஜெபராஜ் கலந்து கொள்ளும், செய்தியளிக்கும் கூடுகைகள், நற்செய்தி கூட்டங்களை தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.
26. கிருபையின் ஊழியங்கள் மூலம் சந்திக்கப்படும் மாவட்டங்களான திருப்பூர், ஈரோடு, திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், நெல்லை, தூத்துக்குடி, குமரி, சென்னை ஆகியவற்றில் தேவன் இன்னும் புதிய பணித்தளங்களைத் தர ஜெபியுங்கள்.
27. வாலிபர் மத்தியில் நடைபெறும் இயேசுவோடு இனிய வாலிபர் மாலை, மாதாந்திரக் கூடுகைகள் (தூத்துக்குடி, சாயர்புரம், ஸ்ரீவைகுண்டம், சிவகாசி, திருவேங்கடம், சாத்தூர், விருதுநகர், மஞ்சம்பட்டி) கூடுகைகள் மூலம் அநேக வாலிபர்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.
28. கிருபையின் ஊழியங்கள் மூலம் நடைபெறும் அற்புதத்தின் மாலை கூடுகைகள் (பாளையங்கோட்டை, ஆலங்குளம், அம்பை, திருவேங்கடம்) மூலம் வசன தெளிவை தேவ ஜனங்கள் பெற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.
29. கிருபையின் ஊழியங்கள் மூலம் நடைபெறும் அற்புத உபவாச ஜெபங்கள் (தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம், மைப்பாறை, மஞ்சம்பட்டி) மூலம் ஜெபிக்கும் ஜெப வீரர்களை தேவன் ஏராளம் எழுப்ப ஜெபியுங்கள்.
30. இதுவரை பணி நடைபெறாத தமிழகத்தில் மற்ற மாவட்டங்களில் இந்த ஆண்டு புதிய பணித்தளங்கள் திறக்கப்பட தேவன் மிஷனெரிகளை தர ஜெபியுங்கள்.

**ஜெபியுங்கள்** **சகோ. B. பொற்செல்வன் ஆசீர் செய்தியளிக்கும் கூட்டங்கள்**

| | |
|---|---|
| ஜுலை 20,21,22 | திருச்சி இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம் |
| செப். 6, 7, 8, 9 | மைலோடு குமரி மாவடடம் |
| செப். 27,28,29 | வேலூர் |

**வருந்துகிறோம்!**

நமது தலைமை அலுவலக ஊழியர் சகோதரி. ரோஸ்மேரி அவர்களுடைய தந்தை திரு. A. அந்தோணி முத்து (வயது 69) 14-5-2012 அன்று அதிகாலை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்கள். அன்னாரது குடும்பத்தின் ஆறுதலுக்காக ஜெபியுங்கள்.

# துன்பங்கள் ஒன்றும் சேதப்படுத்தா வாழ்வு

பா. பொற்செல்வன் ஆசீர்

நீரே இதைச் செய்தீர் என்று உம்மை என்றென்றைக்கும் துதித்து, உமது நாமத்திற்குக் காத்திருப்பேன். உம்முடைய பரிசுத்தவான்களுக்கு முன்பாக அது நலமாயிருக்கிறது. சங். 52:9.

இந்த சங்கீதத்தின் தலைப்பை வாசித்துப் பாருங்கள். தாவீது ஆசாரியனாகிய அகிமெலேக்கினிடத்தில் போனான். அப்போது அங்கு சவுலுடைய வேலைக்காரரில் ஏதோமியனாகிய தோவேக்கு என்னும் பேருள்ள ஒருவன் அன்றையதினம் அங்கே கர்த்தருடைய சந்நிதியில் தடைப்பட்டிருந்தான். அவன் சவுலுடைய மேய்ப்பருக்குத் தலைவனாயிருந்தான். அவன் சவுலிடத்தில் தாவீதை அகிமெலேக்கினிடத்தில் வரக்கண்டேன். இவன் அவனுக்காகக் கர்த்தரிடத்தில் விசாரித்து, அவனுக்கு வழிக்குப் போஜனத்தைக் கொடுத்து, பெலிஸ்தியனாகிய கோலியாத்தின் பட்டயத்தையும் அவனுக்குக் கொடுத்தான் என்றான்.

அதற்கு சவுல் கர்த்தருடைய ஆசாரியனான அகிமெலேக்கை நோக்கி, அகிமெலேக்கே, நீயும் உடன் தகப்பன் வீட்டார் அனைவரும் சாகவே சாக வேண்டும் என்றான். அப்பொழுது ஏதோமியனாகிய தோவேக்கு ஆசாரியர்கள் மேல் விழுந்து, எண்பத்தைந்து பேரை அன்றையதினம் கொன்றான்.

ஆசாரியனாகிய அகிமெலேக்கின் குமாரரில் அபியத்தார் என்னும் பேருள்ள ஒருவன் தப்பி, தாவீது இருக்கும் புறம்பாக ஓடிப்போய் கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொன்று போட்ட செய்தியை தாவீதுக்கு அறிவித்தான். அப்பொழுது தாவீது அந்த வேதனையான சூழ்நிலையில் கண்ணீரின் மத்தியில் அவனுக்கு விரோதமாய் சத்துரு சிங்கம்போல் கெர்ச்சித்து நிற்கும்போது பாடின சங்கீதம் தான் 52வது சங்கீதம்.

துன்பத்தின் மத்தியில், கண்ணீரின் மத்தியில், வேதனைகளின் மத்தியில் தேவனை சார்ந்து கொள்ளுகிறார் தாவீது. தனது வாழ்வில் கடந்து வரும் காரியங்கள் யாவும் தேவனே செய்தார் என்பதை உறுதியாக அறிக்கையிடுகிறார் தாவீது. அந்த விசுவாச அறிக்கையைத் தான் சங். 52:9இல் காண்கிறோம்.

அது மாத்திரமல்ல துன்பங்கள் நடுவில் தேவனை விசுவாசிக்கிற நான் எப்படி துன்பங்களால் சேதப்படாமல் இருக்கிறேன் என்பதை கூறுகிறார் பாருங்கள்.

நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவமரத்தைப் போலிருக்கிறேன். சங். 52:8. என்கிறார். துன்பங்கள் தாவீதை சோர்ந்து போகவிடவில்லை; துயரங்கள் தாவீதுதை காய்ந்து போகச் செய்யவில்லை; சத்துருவின் சீற்றங்கள் தாவீதை பயனற்றவராய் மாற்றிவிடவில்லை; நெருக்கங்கள் தாவீதை கனியற்றவராய் மாற்றிவிடவில்லை; மாறாக செழுமையான, பச்சையான, நல்ல எண்ணெய் தரும் ஒலிவமரம், அதுவும் தேவனுடைய சந்நிதியில், ஆலயத்தில் நிறுத்தியிருக்கிறது. இந்த வெற்றியின் இரகசியம் என்ன? துன்பங்கள் துயரங்கள் தாவீதை அவர் வாழ்வின் செழிப்பை ஆசீர்வாதத்தை சேதப்படுத்தாதின் இரகசியம் என்ன துன்பங்களை தாவீது வென்றது எப்படி?

## வெற்றியின் இரகசியம்

தாவீதின் வாழ்க்கையில் துன்பத்தின் மத்தியிலும் சோர்ந்து போகாமல், கனிகொடுக்கும் வாழ்வில், பெலத்தோடு நிலைத்திருப்பதின் இரகசியம் இதுதான்.

1. நானோ தேவனுடைய கிருபையை என்றைக்கும் நம்பியிருக்கிறேன். சங். 52:8



2. உம்மை என்றைக்கும் துதித்து. சங். 52:9
3. உமது நாமத்திற்கு காத்திருப்பேன். சங். 52:9

தாவீதில் காணப்பட்ட இந்த மூன்று அனுபவங்கள் நம்மிலே காணப்படுமானால் நாமும் துன்பங்களின் நடுவில் பெலன் பெறலாம். துயரங்கள் நடுவே கனி தரலாம். சத்துருவின் சீற்றங்கள் நடுவில் ஜெயம் பெறலாம்.

## நீதிமானின் வாழ்வில் தேவகிருபை

நீங்கள் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்களானால் நீங்கள் நீதிமான்கள் தான் ரோமர் 5:9 நீதிமான்களுக்கு தேவன் அருளும் சிலாக்கியங்களைப் பாருங்கள்.

1. நீதிமான்கள் மேல் கர்த்தருடைய கண்கள் நோக்கமாயிருக்கிறது. சங். 34:15
2. நீதிமானைப் பகைக்கிறவர்கள் குற்றவாளிகளாவார்கள். சங். 34:21
3. நீதிமானை ஒருபோதும் தள்ளாடவெட்டார். சங். 55:22

நீதிமான்களுக்கு அவர்கள் வாழ்வில் தேவன் அருளும் கிருபைகளை குறித்து வேதம் ஏராளமாய் பேசுகிறது. அவைகளை நீங்கள் உங்கள் வாழ்வில் விசுவாசித்து சார்ந்து கொள்ளுங்கள்.

தாவீது இப்படித்தான் சார்ந்து கொண்டான் எனவே தான், அவர் (கர்த்தர்) சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார். பிர. 3:11 என்று தேவன் செய்வது யாவும் நேர்த்தியாகவே இருக்கும் என தாவீதில் இருந்த விசுவாசம் அவன் குமாரனுக்குள்ளும் வந்தது. இப்படி நாமும் விசுவாசிக்கும்போது

*அவருடைய கிருபை நம்மில் செய்வது என்ன?*

- கிருபை நம்மைத் (துன்பங்களின் நடுவில்) தேற்றுகிறது. சங். 119:76
- கிருபை நம்மை (துயரங்கள் நடுவில்) உயிர்ப்பிக்கிறது. சங். 119:88
- கிருபை நமக்கு (சத்துருவின் சீறலின் மத்தியில்) முடிசூடலாய் இருக்கிறது. சங். 103:4
- கிருபை நம்மேல் (நெருக்கங்களை காட்டிலும்) பெரியதாய் இருக்கிறது.
- கிருபை நம்மோடு (பாடுகள் கொஞ்சகாலம்தான்) அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது. சங். 103:17
- கிருபையை (பாடுகள் நீக்கிவிடும்) தேவன் நம்மை விட்டு விலக்குவதே இல்லை. சங். 89:33
- கிருபை (சத்துரு தொடர்ந்து வரும்போது) நன்மையோடு இணைந்து நம்மை தொடருகிறது. சங். 23:6
- கிருபை (பாடுகள் கண்ணீரை தரும்போது) களிகூர்ந்து மகிழப்பண்ணுகிறது. சங். 31:7
- கிருபை (துயரங்கள் சூழ்ந்திடும்போது) நம்மை சூழ்ந்து கொள்ளுகிறது. சங். 32:10
- கிருபை (துக்கங்கள் செயல்படாது தடுக்கும்போது) நம்மை நடத்துகிறது. சங். 119:124

இப்படியே ஏராளமாய் கிருபையின் மேல் கிருபை அருளும் ஆசீர்வாதங்களை காணலாம்.

ஆகையால் தான் வேதம் சொல்கிறது. யோவா. 1:16 “நாம் எல்லாரும் **கிருபையின் மேல் கிருபை** பெற்றோம்” என்று அல்லேலூயா!

பாடுகளை பார்க்கும் கண்கள் பரமனை காண இயலாது
பரமனை காணும் கண்கள் பாடுகளின் ஊரே பரலோக மகிமையை காணும்.

## நீதிமானின் துதியின் அனுபவம்

ஜெபம் என்பது வேறு; ஸ்தோத்திரம் அல்லது நன்றி என்பது வேறு; துதி என்பது வேறு மூன்றும் ஒன்றொடொன்று தொடர்புடையது ஆனாலும் அதன் அனுபவ நிலைகளோ வேறு.

ஜெபம் என்பது நமது தேவைகளை, பிறர் தேவைகளை தேவனுடைய பாதத்தில்

வைத்து தேவனின் கரத்திலிருந்து கிரியை எதிர்பார்ப்பது; ஜெபம் தேவனுடையவைகளை – அவரது வல்லமை, மன்னிப்பு, கிருபை போன்றவை – தேடுவது. நமது ஜெபத்தை தேவன் பரலோகத்திலிருந்து கேட்கிறார். பதில் அளிக்கிறார். நம் ஜெபம் பரலோகம் நோக்கி செல்கிறது.

ஸ்தோத்திரம் என்பது தேவனுடையவைகளை நாம் நம்முடைய வாழ்வில் ஜெபம் மூலம் தேடினபோது கண்டேன் என்ற அனுபவத்தின் விளைவு! தேவனுடையவைகளில் நம்மை களிகூரச் செய்கிறது ஸ்தோத்திரம்! தேவனுடையவைகளை அனுபவித்ததின் மகிழ்ச்சி பெருக்குதான் ஸ்தோத்திரத்தின் அனுபவம். ஸ்தோத்திரத்தை பரலோகம் அங்கீகரிக்கிறது.

துதி என்பது முற்றிலும் மாறானது. அது எனது தேவைகளுக்காய் என் தேவனிடம் வருவதும் அல்ல! தேவனுடைய வல்லமை கிரியைகளுக்காய் தேவனிடம் வருவதும் அல்லா் மாறாக தேவனே எனக்குப் போதும்! அவருடைய விருப்பமே எனது விருப்பம்; இயேசு போதும் இயேசு போதுமே என்று அனுபவம் தான் துதி! துதியின் அனுபவம் என்பது தேவன் எதை என் வாழ்வில் அனுமதித்தாலும் அது தேவனுடைய கரத்திலிருந்து வருகிறதானபடியால் ஒருபோதும் எனக்கு தீமையை கொண்டு வராது என்ற அசையாத விசுவாச வாழ்வு இந்த விசுவாசமே துதிக்கும் அனுபவம் என்னும் விளக்குக்கு எண்ணெய் போன்றது.

இந்த துதி பரலோக தேவனை, அவரது தூதர் குழாமை நம்மோடு இணைத்து விடுகிறது. பரலோக மகிமையை பூலோகில் அனுபவிக்கும் அனுபவம் தான் துதி.

### சிறுமியின் விசுவாசம்

ஒரு ஞாயிறு பாடசாலையின் ஆசிரியர் தன் ஞாயிறு பாடசாலை பிள்ளைகளுக்கு சங். 23:1ஐThe Lord is muy shepherd; I shall not want என்று ஆங்கிலத்தில் கற்று கொடுத்தார்கள் அதன் அர்த்தம் கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார் நான் தாழ்ச்சியடையேன் சங். 23:1 என்பது. அடுத்த ஞாயிற்றுக்கிழமை வந்த பிள்ளைகளில் ஒருவன் இப்படி கூறினான். The Lord my shepherd That's all I want என்றாள். அதன் அர்த்தம் கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார் அதுமட்டுமே எனக்கு போதும் என்பதாகும்.

எத்தனை விசுவாசமான அறிக்கை பாருங்கள். இப்படிப்பட்ட உறுதியான விசுவாசம் தான் துதியை –பரலோக அனுபவமான துதியை – நல்வாழ்வில் கொண்டுவரும்.

### சிறுவனின் விசுவாசம்

ஆஸ்திலேலியாவின் புல்வெளிகளில் ஒரு சிறுவன் மந்தை மேய்த்து வந்தான். அங்கு குளிர் காலங்களில் திடீரென பனி ஏராளமாய் பெய்து பாதைகளில் கட்டடங்களில் உறைந்துவிடும்.

அவன் ஆடுகளை மேய்க்கும்போது தான் ஞாயிறு பள்ளிகளில் கற்ற வசனங்களை சொல்லிக்கொண்டே ஆடுகளை மேய்ப்பது வழக்கம். அவன் ஞாயிறு பள்ளி ஆசிரியர் அச்சிறுவனுக்கு The Lord is my shepherd (கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்) என்ற வசனத்தை வலது கையின் ஒவ்வொரு வில்களை தொட்டுக்கொண்டு சொல்ல கற்றுக்கொடுத்திருந்தார்கள். The என்பதற்கு சுண்டு விரலை தொடவேண்டும்; Lord என்பதற்கு மோதிர விரலை தொட வேண்டும்; is என்பதற்கு நடுவிரலை தொடவேண்டும்; **My என்று சொல்லும்போது மாத்திரம் ஆட்காட்டி விரலை இருக பிடித்துக்கொண்டு இருதயத்தின் மேல் வைத்து My என்று சொல்ல வேண்டும் Shepherd என்பதற்கு பெருவிரலை தொட வேண்டும்** என



கற்றுக்கொடுத்திருந்தார்கள்.

மந்தையை மேய்க்கும்போது ஒருநாள் பனி பெய்ய ஆரம்பித்தது. மந்தையை அச்சிறுவன் தூரத்தில் தெரிந்த குகையை நோக்கி ஓட்டிச் சென்றான். எல்லா ஆடுகளையும் குகைக்குள் அனுப்பினான். தான் மட்டும் உள்ளே செல்ல இடமில்லை; எனவே குகையின் வாசலில் நின்று The Lord is my shepherd (கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்) என்று ஆங்கிலத்தில் ஆசிரியர் கற்றுக்கொடுத்தப்படி கூறிக்கொண்டேயிருந்தான்!

பனி பெய்து குகையை மூடி வாசலை மூட ஆரம்பித்தது. அச்சிறுவன் **My** என்று கூறி கரத்தை இருதயத்தோடு இணைத்து வைத்தான் ஜெபித்தான்! பனி முழுவதும் மூடிற்று; பனி பெய்து முடிந்தது! யாவரும் தேடி வந்தனர்; பனி மூடியிருந்த குகையை உடைத்து பனியை அகற்றினர்; சிறிய தம்பி தனது ஆட்காட்டி விரலை இறுக பிடித்து இருதயத்தில் வைத்த வண்ணம் நின்றிருந்தான்; மரித்திருந்தான் – இல்லை இல்லை தனது அசையாத விசுவாசத்திற்கு சாட்சியானான். அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான். இது உண்மை சம்பவம்!

என் ஜீவன் போனாலும் இயேசுவை நம்பு என்ற ஞாயிறு பள்ளி பாடலுக்கொப்ப அவன் என் ஜீவன் போனாலும் கர்த்தர் என் மேய்ப்பரே! என அறிக்கையிடுகிறான்!

இந்த விசுவாசம் தான் துதியின் பரலோக மகிமையின் அனுபவத்தை நம்மை காணச் செய்யும்!

இப்படிப்பட்ட துதி பிறந்தால் எரிகோகோட்டை தகர்ந்துபோம்! துதித்ததும் என் துன்பம் நீங்கவிலிலையே என்ற கேள்வி எழாது. சத்துருவின் சேனைகள் யோசபாத்தின் முன் அவன் துதி செய்த கூட்டம்முன் தாங்கள் தங்களில் ஒருவரையொருவர் அழிக்கத்தக்கவிதமாய் கைகலந்தார்கள். 2நாளா. 20:21-23 என்ற உண்மை நம் வாழ்வின் அனுபமாய் மாறும். துதித்தும் அற்புதம் நிகழவில்லையே என்ற ஏக்கம் உண்டாகாது.

### காத்திருக்கும் நீதிமான்

தாவீதைப் பாருங்கள்! தேவன் அவனை அபிஷேகம் பண்ணினார் இராஜாவாக! ஆனால் உடனே அவன் சிங்காசனத்தில் உட்கார ஓடவில்லை. சிங்காசனத்தில் இருந்த கர்த்தரால் புறக்கணிக்கப்பட்ட சவுலை 1சாமு. 15:23 கொல்ல எத்தனிக்கவில்லை. சவுல் தாவீதை கொல்ல துணிந்தபோதும், இருமுறை தாவீதின் கையில் சவுல் சிக்கினபோதும் சவுலை தாவீது கொள்ளவில்லை.

மாறாக தேவனுடைய நேரத்திற்கு தேவனுடைய செயலுக்கு காத்திருந்தான் தாவீது.

தேவ சித்தத்தை அறிந்தால் மட்டும் போதாது; ஒரு விசுவாசி தேவனுடைய நேசத்திற்கும் காத்திருக்க வேண்டும் தேவனுடைய நேரம் வந்தவுடன் நாமாய் செயல்பட்டு விடவும் கூடாது தேவனுடைய செயலுக்கும் காத்திருக்க வேண்டும்.

### மோசேயும் தேவனுடைய நேரமும்

இன்று அநேகர் தேவசித்தத்தை அறிந்தவுடன் தேவனுடைய நேரத்தை அறிய விழையாமல் தேவசித்தத்தை மோசேயைப் போல் தாமாகவே பட்டயத்தையெடுத்து இஸ்ரவேலின் இரட்சகனாக தன்னை மாற்ற நினைத்ததுபோல் செயல்பட்டு, பின்பு தோற்று மோசேயைபோல் ஓடுகின்றனர். யாத். 2:11-15. இது தேவனுடைய நேரம் வரும்வரை காத்திருக்காததின் விளைவு. தேவனுடைய நேரத்திற்கு நாம் காத்திருப்போமேயானால் நாம் மோசேயைப்போல் தேவசித்தத்தை விட்டு ஓட வேண்டிய அவசியம் ஏற்படாது. ஆகையால் நாம் தாவீதைப்போல் தேவசித்தத்தை அறிந்து தேவனுடைய வேளை வரும்வரை பொறுமையாய் காத்திருக்கப் பழகுவோம். அப்போது நாம் நம்முடைய வாழ்வில் வீணாய் இழப்பது ஒன்றுமில்லை.

## யெகூவும் தேவனுடைய செயலும்

இன்னும் அநேகர் தேவசித்தத்தையும் தேவனுடைய வேளையும் அறிந்து தேவன் செயல்பட இடம் கொடுக்காமல், நிம்சியின் மகனான யோசப்பாத்தின் குமாரன் யெகூவைப்போல தேவன் செயல்பட இடங்கொடாமல் தாங்கள் செயல்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் செய்ய வேண்டியவைகளை செய்து முடித்தாலும் தங்கள் வாழ்வின் ஆசீர்வாதத்தை இழந்து போகிறார்கள்.

கர்த்தர் யெகூவை இஸ்ரவேலின்மேல் இராஜாவாக அபிஷேகம் பண்ணினார். 2இராஜா. 9:1-6 அவனைக் கர்த்தர் அபிஷேகம் பண்ணின நோக்கம் ஆகாபின் பாவத்திற்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கவே. 2இரா. 9:7-10.

ஆனால் தேவனே சிங்காசனத்தை தனக்கு தர காத்திராமல் தேவன் செயல்பட இடங்கொடாமல், இஸ்ரவேலின் இராஜாவான யோரோமுக்கு விரோதமாய் அவன் அரண்மனையில் இல்லாத நேரத்தில் அரண்மனையை கைப்பற்றி கட்டுப்பாடு பண்ணினான். 2இரா. 9:14.

யோனதாப்வைப் பார்த்து நீ என்னோடே கூட வந்து கர்த்தருக்காக எனக்கு இருக்கிற பக்தி வைராக்கியத்தைப் பார் என்றான். 2இரா. 10:16. ஆனால் அவன் நேபாத்தின் குமாரனாகிய யெரோபெயாமின் பாவங்களைவிட்டு விலகவில்லை. 2இரா. 10:29 என்கிறது வேதம். அவன் ஆகாபின் பாவங்களை தேவன் வெறுத்தது போல் வெறுத்தான். ஆனால் யெரொபெயாமின் பாவங்களை கர்த்தர் வெறுத்ததுபோல் வெறுக்கவில்லை. எனவேதான் ஆகாபின் பாகால்களைத் தகர்த்தவன் யெரோபெயாமின் பொற்கன்றுகுட்டிகளைச் சேவித்தான். காரணம் தேவனின் செயலுக்கு இடம் கொடுத்திருந்தால் இரண்டையும் அவனை வெறுக்க வைத்து முழு வெற்றியை கொடுத்திருப்பார் தேவன். ஆனால் தேவனுடைய செயலுக்கு இடம் கொடுக்காத யெகூ வாழ்வு பாதியில் தோல்வியாகிவிட்டது.

தேவன் தாவீதுக்கு கொடுத்த சாட்சியை, தேவன் தாவீதைப்போல் யெகூவைத் தெரிந்து கொண்டாலும், யெகூவிற்கு கொடுக்க முடியவில்லை. அவன் தாவீதைப்போல் ஆசீர்வதிக்கப்படவுமில்லை.

நாமும் நம்முடைய வாழ்வில் தேவனுக்கு காத்திருக்க பழகுவோம். தேவசித்தத்தை அறிந்து தேவனுடைய வேளையை புரிந்து தேவனுடைய வேளைக்கு நாம் முந்திக் கொள்ளாது தேவனுடைய செயலுக்கு இடங்கொடுத்து அவர் செய்ய வேண்டியதை நாம் செய்யாமல் இயேசுவுக்குப்பின் நடப்போம். அப்போது வல்லமை விளங்கும்.

தாவீதைப் போல் காத்திருக்க பழகுவோம்! கர்த்தரின் செயலுக்கும், கர்த்தரின் வேளைக்குமே! அப்போதும் நமக்கு வரும் பாடுகள் நம்மில் ஒரு சேதத்தையும் ஆசீர்வாத இழைப்பையும் நம்மில் உண்டாக்காது. அப்போது நாம் அறிக்கையிடலாம். தைரியமாக துன்பங்களின் நடுவே நின்று ஆசீர்வதிக்கப்பட்ட பச்சையான ஒலிவ மரம் நான் என்று! கர்த்தரே இதைச் செய்தார் என்று துதித்துப் பாடலாம் குதூகலத்துடன் ஆமென்!

மேலும் பவுலைப் போல இப்படி தைரியமாகக் கூறலாம்.

நாங்கள் இரக்கம் பெற்றிருப்பதால் சோர்ந்து போகிறதில்லை 2கொரி. 4:1

நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை. 2கொரி. 4:8

கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை 2கொரி. 4:8

துன்பப்படுத்தப்பட்டும், கைவிடப்படுகிறதில்லை 2கொரி. 4:9

கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை. 2கொரி. 4:9

எங்கள் புறம்பான மனுஷன் அழிந்தும் உள்ளான மனுஷன் நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது. 2கொரி. 4:16 ஆமென் அல்லேலூயா!



## செய்தி தொகுப்பு

- 1856இல் மேனாட்டு தமிழறிஞர் பிஷப் கால்டுவெல் அவர்கள் தமிழை செம்மொழி என தமது ஒப்பிலக்கணம் நூலில் எழுதியுள்ளார்.
- 1887இல்பரிதிமாற்கலைஞர் தமிழ்மொழி வரலாறு என்ற நூலில் தமிழை உயர்தனிச் செம்மொழி என எழுதியுள்ளார்.
- 17-8-2007இல் இவருக்கு நினைவு சிறப்பு அஞ்சல் தலையை மத்திய அரசு வெளியிட்டது. திராவிட மொழிகள் என்ற சொல்லாக்கத்தை உருவாக்கியவர் பிஷப் கால்டுவெல்
- 2-1-1968இல் சென்னை மெரினா கடற்கரை சாலையில் அறிஞர் அண்ணா நிறுவனார்.
- 1966இல் மொழி ஞாயிறு நேயப் பாவணர் தமிழ் தான் உலகில் முதன்மொழியான செம்மொழி (The primary classical Language of the world) என்ற ஆங்கில நூலினை வெளியிட்டார்.
- 18-2-2006இல் இவரது நினைவு சிறப்பு அஞ்சல் தலை மத்திய அரசால் வெளியிடப்பட்டது.
- 30-10-2007 அன்று இவரது முழு உருவச்சிலை தமிழக அரசால் மதுரைமாவட்டம் சாத்த மங்கலம் கிராமத்தில் திறந்து வைக்கப்பட்டது.
- 12-10-2004 அன்று இந்தியாவில் தமிழ்செம்மொழியே என்று அங்கிகாரம் செய்யப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டது.
- இதற்குமுன் செம்மொழி என கருதப்பட்டமொழிகள் கிரேக்கம், இலத்தீன் சமஸ்கிருதம், எபிரேயம் ஆகியவை
- உலகில் 3000 மேற்பட்ட மொழிகள் பேச்சுவழக்கில் உண்டு.
- அந்த அந்த மொழிக்கென தனி எழுத்து பெற்றுள்ளவை சுமார் 300 மொழிகள் மட்டும்.

## *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.